இணையதள அறிவிக்கை

ந.க.எண் 3031/2019/அ3

நாள் . .08.2022.

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு

## மயிலாடு துறை மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம்

## அறிவிக்கை (Notification)

## ஒன்றிய தலைப்பு இரவுக்காவலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

மயிலாடு துறை மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் சீர்காழி ஊராட்சி ஒன்றியம், ஒன்றிய தலைப்பில் காலியாக உள்ள இரவுக்காவலர் ஒரு காலிப்பணியிடத்தை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஒன்றிய தலைப்பு இரவுக்காவலர் காலிப்பணியிடங்களுக்கான விவரம்**

| வ. எண் | இனசுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|
| 1. | பொது பிரிவினர் (முன்னுரிமை உடையவர்கள்) | - |

**தகுதிகள் :-**

தேர்வு செய்யப்படும் ஆண்டில் 01.07.2022 தேதியன்று பொதுப்பிரிவினர் 32 வயதுக்கு மிகையாகாமலும், SC/ST பிரிவினருக்கு 37 வயது மிகாமலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவினருக்கு 34 வயது மிகாமலும் இருக்கவேண்டும்.

**இதர தகுதிகள் :-**

1. எழுத படிக்க தெரிந்ததிருக்க வேண்டும்

| இனம் | வயது (01.07.2022 அன்று) | கல்வித்தகுதி |
|---|---|---|
| பொதுப்பிரிவினர் | 18 வயது பூர்த்தி அடைந்தும் 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் | 18 வயது பூர்த்தி அடைந்தும் 37 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | |

தொடர்ச்சி...

| இனம் | வயது (01.07.2022 அன்று) | கல்வித்தகுதி |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர்,<br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் | 18 வயது பூர்த்தி அடைந்தும் 34 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| அனைத்து பிரிவு ஆதரவற்ற விதவை | 18 வயது பூர்த்தி அடைந்தும் 37 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | |

அரசாணை நிலை எண்:65, பணியாளர் மற்றும் நிர்வாக நலத்துறை., நாள்:27.05.2009, அரசாணை நிலை எண்:122 மனிதவள மேலாண்மைத்துறை (கே2) நாள்:02.11.2021, அரசாணை நிலை எண்:91 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை., நாள்:13.09.2021, மற்றும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் கடித எண்.53656/2019/எப்1, நாள்:19.04.2022-இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி பணியிடம் வழங்கப்படும்.

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. ஒவ்வொரு பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.
4. அரசு விதிகளின் படி இன சுழற்சி முறையினை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.
5. விண்ணப்பதாரர் 01.07.2022 தேதியில் 18 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும்.
6. தேர்வுசெய்யப்படும் நபர்களுக்கு 2017 திருந்திய ஊதியக்குழு விதிகளின் கீழ் சிறப்பு காலமுறை ஊதியம் அட்டவணை (Matrix Table Level - 1) குறைந்தபட்சம் தொடக்கநிலை ஊதியம் ரூ.15700-50000/- மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் ஆணையர், ஊராட்சி ஒன்றியம், சீர்காழி அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ **11.09.2022** அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) அனுப்பி வைக்கப்படும்

ஒன்றிய தலைப்பு இரவுக்காவலர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் தேசிய தொழில் நெறி வழிகாட்டு மைய இணையதள(National Career Service Portal) www.nioc.gov.in மற்றும் மயிலடுதுறை மாவட்ட இணையதள www.mayiladuthurai.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றிய ஆணையர் /
வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),
ஊராட்சி ஒன்றியம்,
சீர்காழி.
மயிலாடுதுறை மாவட்டம்

21
22/8/22